**செய்தி வெளியீடு எண்: 014** **நாள்: 04.01.2018**

**<u>செய்தி வெளியீடு</u>**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று (4.1.2018) தலைமைச் செயலகத்தில், உள்துறை சார்பில் விருதுநகர் மாவட்டத்தில் 7 கோடியே 76 லட்சத்து 70 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் இராஜபாளையம் தெற்கில் கட்டப்பட்டுள்ள 41 காவலர் குடியிருப்புகள், வெம்பக்கோட்டை காவல் நிலையம் மற்றும் இராஜபாளையத்தில் தமிழ்நாடு சிறப்பு காவல் படை 11ஆம் அணிக்கான ஆயுதக் கிடங்கு கட்டடம் ஆகியவற்றை காணொலிக் காட்சி (Video Conferencing) மூலமாகத் திறந்து வைத்தார்கள். மேலும் 16 கோடியே 45 லட்சத்து 30 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 120 காவலர் குடியிருப்புகள், 4 காவல் நிலையங்கள் ஆகியவற்றையும் திறந்து வைத்தார்கள்.

மாநிலத்தின் அமைதியைப் பேணிப் பாதுகாப்பது, சட்டம் ஒழுங்கைப் பராமரிப்பது, குற்றங்கள் நிகழாமல் தடுப்பது, குற்றவாளிகளைக் கண்டுபிடித்து தக்க தண்டனை பெற்றுக் கொடுப்பது போன்ற பல்வேறு முக்கிய பணிகளை காவல்துறை ஆற்றி வருகின்றது. இத்தகைய முக்கியத்துவம் வாய்ந்த காவல்துறையின் பணிகள் மேலும் சிறக்க, புதிய காவல் நிலையங்கள் மற்றும் காவலர் குடியிருப்புகளைக் கட்டுதல், காவல்துறை அலுவலகங்களில் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல், ரோந்து பணிகளை மேற்கொள்ள புதிய வாகனங்களை வழங்குதல் போன்ற பல்வேறு திட்டங்களை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வழியில் செயல்படும் தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகிறது.

அந்த வகையில், விருதுநகர் மாவட்டம், இராஜபாளையம் தெற்கில் 5 கோடியே 20 லட்சத்து 45 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 41 காவலர் குடியிருப்புகள், 63 லட்சத்து 25 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள வெம்பக்கோட்டை காவல் நிலையம் மற்றும் இராஜபாளையத்தில் 1 கோடியே 93 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள தமிழ்நாடு சிறப்பு காவல் படை 11ஆம் அணிக்கான ஆயுதக் கிடங்கு கட்டடம் ஆகியவற்றை காணொலிக் காட்சி மூலமாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று திறந்து வைத்தார்கள்.

மேலும், தேனி மாவட்டம்– பெரியகுளம் மற்றும் தென்கரையில் 69 காவலர் குடியிருப்புகள், திருப்பூர் மாவட்டம் – தளியில் 30 காவலர் குடியிருப்புகள், வேலூர்

மாவட்டம் – கே.வி. குப்பத்தில் 21 காவலர் குடியிருப்புகள், என 14 கோடியே 2 லட்சத்து 37 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 120 காவலர் குடியிருப்புகள்;

சென்னை பெருநகர் – பள்ளிக்கரணை, சேலம் மாவட்டம் – வீராணம், விழுப்புரம் மாவட்டம் – ரோஷணை மற்றும் செஞ்சி ஆகிய இடங்களில் 2 கோடியே 42 லட்சத்து 93 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 4 காவல் நிலையங்கள்;

என மொத்தம் 24 கோடியே 22 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள காவல் துறை கட்டடங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று திறந்து வைத்தார்கள்.

மேலும், தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகத்தின் 2016–17ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசின் ஈவுத் தொகையான 3 கோடியே 16 லட்சம் ரூபாய்க்கான காசோலையை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்களிடம் இன்று தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகத்தின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் திரு. ந. தமிழ்செல்வன், இ.கா.ப., அவர்கள் வழங்கினார்.

தமிழ்நாட்டில் கடவுச் சீட்டு (Passport) சரிபார்க்கும் முறையில், தற்போது ஏற்படும் நேர விரயத்தைக் குறைக்கும் நோக்கில், தமிழ்நாடு அரசின் புதுமை முயற்சிகள் திட்டத்தின் கீழ் (Tamil Nadu Innovative Initiatives Scheme) 2 கோடியே 91 லட்சத்து 57 ஆயிரம் ரூபாய் செலவில் எம் பாஸ்போர்ட் காவல் செயலி மூலம் (M Passport Police APP) விண்ணப்பதாரரின் இருப்பிடத்திலிருந்து பலகைக் கணிப்பொறி (Tablet PC) வாயிலாக உடனடியாக தரவேற்றம் செய்யும் சேவையை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று துவக்கி வைத்து, ஐந்து காவலர்களுக்கு எம் பாஸ்போர்ட் காவல் செயலியுடன் கூடிய பலகைக் கணிப்பொறிகளை வழங்கினார்கள். இத்திட்டத்தின்படி, 1,767 பலகை கணிப்பொறிகள் அனைத்துக் காவல் நிலையங்களுக்கும் வழங்கப்படும். இதன்மூலம், பொது மக்களின் கடவு சீட்டு வழங்கும் பணி துரிதமாகவும், எளிமையாகவும் இருப்பதோடு, சரியான தருணத்தில் கடவு சீட்டு கிடைக்கவும் வழி வகுக்கும். இந்தியாவிலேயே முதன் முறையாக தமிழ்நாட்டில் தான் மாநிலம் முழுவதும் இத்தகைய திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

பொதுமக்களுக்கான சேவையில் நாட்டம் கொண்ட தமிழ்நாடு அரசு, காவல் துறையில் “குற்றம் மற்றும் குற்றவாளிகளை கண்காணிக்கும் வலை பின்னல் அமைப்பினை” (Crime and Criminal Tracking Network and Systems- CCTNS) அறிமுகப்படுத்தி, (1) இணையதள புகார் பதிவு (2) முதல் தகவல் அறிக்கையை பார்க்க – பதிவிறக்கம் செய்யும் வசதி (3) முதல் தகவல் அறிக்கை மற்றும் சமுதாய நல பதிவேட்டின் நிலை அறிதல் (4) வாகனங்களின் விபரம் தேடல் (5) காணாமல் போனவர்கள் மற்றும் அடையாளம் தெரியாத இறந்து போன நபர்களின் விவரங்களை பற்றிய தகவல்கள் (6) சாலை வாகன விபத்து தொடர்பான ஆவணங்கள் பதிவிறக்கம் (7) தொலைந்து போன ஆவண அறிக்கை பெறுதல் உள்ளிட்ட ஏழு இணையதள சேவைகளை பொதுமக்களுக்காக வழங்கி வருகின்றது. அதன் தொடர்ச்சியாக, குறுஞ்செய்தி மூலம் சாட்சிகளுக்கு நீதிமன்ற அழைப்பாணை தகவல் அனுப்பும் வசதியை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று துவக்கி வைத்தார்கள். இவ்வசதிப்படி, காவல் நிலையங்களில் உள்ள சிசிடி என் எஸ் கணினியில் பதிவு செய்யப்படும் விபரங்களின் அடிப்படையில் தானியங்கு முறையில் சாட்சிகளுக்கு குறுஞ்செய்தி முன்னரே அனுப்பப்படும். குறுஞ்செய்தி மூலம் சாட்சிகளுக்கு நீதிமன்ற அழைப்பாணை தகவல் அனுப்பும் வசதி இந்தியாவிலேயே முதன்முறையாக தமிழ்நாடு காவல்துறையால் அறிமுகம் செய்யப்படுகிறது.

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் 24 காவல் துணை கண்காணிப்பாளர் பணியிடங்களுக்கு தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு பணி நியமன ஆணைகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று வழங்கினார்கள்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு பால்வளம் மற்றும் பால்பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் திரு.கே.டி. ராஜேந்திரபாலாஜி, தலைமைச் செயலாளர் (முழு கூடுதல் பொறுப்பு) திரு.க. சண்முகம், இ.ஆ.ப., உள்துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் நிரஞ்சன் மார்டி, இ.ஆ.ப., காவல்துறை தலைமை இயக்குநர் திரு. டி.கே. ராஜேந்திரன், இ.கா.ப., காவல்துறை கூடுதல் தலைமை இயக்குநர் (தொழில் நுட்பப் பிரிவு) திரு.அபாஷ் குமார், இ.கா.ப., காவல்துறை கூடுதல் தலைமை இயக்குநர் (மாநில குற்ற ஆவணக் காப்பகம்) திருமதி சீமா அகர்வால், இ.கா.ப., சென்னை பெருநகர

காவல்துறை ஆணையர் முனைவர் அ.கா. விஸ்வநாதன், இ.கா.ப., தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகத்தின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் திரு. ந. தமிழ்செல்வன், இ.கா.ப., சென்னை மண்டல கடவுச்சீட்டு அலுவலர் திரு P.K. அசோக்பாபு, IFS மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**
**நாள்: 4.1.2018**